செய்தி வெளியீடு எண். 23-2017 நாள்: 06.10.2017

விழுப்புரம் மாவட்டம் சிறுபான்மையின மாணவ/ மாணவியர்களுக்கு பள்ளி கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

தமிழ்நாட்டில் உள்ள அரசு/ அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் பயிலும் இஸ்லாமியர், கிறித்துவர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் வகுப்பைச் சார்ந்த மாணவ/ மாணவியர்களுக்கு பள்ளி மேற்படிப்பு திட்டத்தின் கீழ் 2017-18-ஆம் கல்வி ஆண்டிற்கு கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

11-ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு (ITI, ITC, வாழ்க்கை தொழிற்கல்வி, பாலிடெக்னிக், செவிலியர்/ ஆசிரியர், பட்டயப்படிப்பு, இளங்கலை, முதுகலை உட்பட) கல்வி பயிலும் மாணவ/ மாணவியருக்கு தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்கு ஆன்லைன் மூலம் www.scholarships.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டிய காலக்கெடு 31.10.2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையின மாணவ/ மாணவியர்கள் மேற்படி கல்வி உதவித்தொகை பெற உரிய காலத்தில் விண்ணபித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.